**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்: 353** **நாள்:04.08.2026**

**சோழிங்கநல்லூர் மண்டலம், எழில் நகரில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி வளாகத்தில் "பள்ளிகளின் மாணவர்கள் மற்றும் பள்ளிக்குச் செல்லா குழந்தைகள் மீண்டும் பள்ளியில் சேருவதற்காக அத்தியாவசிய சான்றிதழ்கள் வழங்கும் சிறப்பு முகாம் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் பள்ளி செல்லும் மாணவர்களின் இடைநிற்றலைத் தடுத்தல் தொடர்பாக அலுவலர்கள் மற்றும் தொடர்புடைய பங்குதாரர்களுடனான கலந்தாய்வுக் கூட்டம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 24.07.2026 அன்று நடத்தப்பட்டு அலுவலர்களுக்கு பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

அதனடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் சார்பில், இன்று (04.08.2026) சோழிங்கநல்லூர் மண்டலம், வார்டு-195, எழில் நகரில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளி வளாகத்தில் "பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் மற்றும் பள்ளி செல்லா குழந்தைகள் மீண்டும் பள்ளியில் சேருவதற்காக அத்தியாவசிய சான்றிதழ்கள் வழங்கும் சிறப்பு முகாம் நடைபெற்றது.

இந்த முகாமினை தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், தொடங்கி வைத்து, முகாமின் செயல்பாட்டினை ஆய்வு செய்து, முகாமில் விண்ணப்பித்து தீர்வு காணப்பட்ட சான்றிதழ்களை மாணவர்களுக்கு வழங்கினார்.

இம்முகாமானது, பள்ளி செல்லா குழந்தைகளை மீண்டும் பள்ளிகளில் சேர்த்தல், பள்ளி செல்லாத மற்றும் பள்ளிக்குச் செல்லும் மாணவர்களுக்குத் தேவையான ஆவணங்களைப் பெற்றுத் தருதல் மற்றும் கல்வி உதவித் திட்டங்களை ஒருங்கிணைத்து வழங்குதல் ஆகிய நோக்கங்களுடன் நடத்தப்பட்டது.

பள்ளி செல்லா குழந்தைகளை மீண்டும் பள்ளியில் சேர்க்க ஆதார் அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ் போன்ற ஆவணங்கள் அவசியமாகும். மேலும், அரசு கல்வி உதவித்தொகைகளைப் பெற சாதிச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் போன்ற ஆவணங்களையும் பெறுவதற்கான வழிகாட்டுதலும், விண்ணப்பிக்கும் வசதியும் இம்முகாமில் ஏற்பாடு செய்யப்பட்டது.

மேலும், பெற்றோரை இழந்த மாணவர்கள் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு-சென்னை (DCPU) மூலம் செயல்படுத்தப்படும் "அன்பு கரங்கள்" திட்டத்தின் கீழ், பன்னிரண்டாம் வகுப்பு வரை மாதம் ரூ.2,000 கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இம்முகாமின் மூலம் கண்ணகி நகர்-சென்னை தொடக்கப்பள்ளி, கண்ணகி நகர் 11வது நிதி-சென்னை தொடக்கப்பள்ளி, கண்ணகி நகர் FAB-சென்னை தொடக்கப்பள்ளி, எழில்

நகர்-சென்னை நடுநிலைப்பள்ளி மற்றும் கண்ணகி நகர்-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் அப்பகுதிகளைச் சார்ந்த மாணவ, மாணவியர், அவர்களுடைய பெற்றோர்கள் பயனடைந்தனர்.

இம்முகாமில் குடும்ப அட்டைகள், சாதிச் சான்றிதழ்கள், அன்புக் கரங்கள், ஒற்றைப் பொற்றோர்க்கான திட்ட உதவி, ஆதிதிராவிடர் நலத் திட்ட உதவி, பழங்குடியினர் நலத் திட்ட உதவி, பிற்படுத்தப்பட்டோர் நலத் திட்ட உதவி, ஆதார் அட்டைகள், பிறப்புச் சான்றிதழ்கள் உள்ளிட்ட 409 விண்ணப்பங்கள் பெறப்பட்டு, இதன் மீது தொடர்புடைய அலுவலர்களால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம்முகாமில் மேற்குறிப்பிட்ட பகுதிகளைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய TACTV, ஆதார் பதிவு மற்றும் புதுப்பிப்பு சேவை, தென் சென்னை வருவாய்த்துறை, TNeGA e-சேவை மையம், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO), SC/ST கல்வி உதவித்தொகை சேவைகள், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை (DBCMW), மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சென்னை (DCPU), உணவுப் பொருள் வழங்கல் துறை (Civil Supplies) மற்றும் பிற தொடர்புடைய அரசு துறைகளின் சேவைகள் ஒரே இடத்தில் வழங்கப்பட்டது.

இம்முகாமில் மாநகராட்சியின் கல்வி அலுவலர்கள், பாலினம் மற்றும் கொள்கை ஆய்வக அலுவலர்கள், சமூக மேம்பாட்டுப் பிரிவு, சமூக பொருளாதார மேம்பாட்டுக் குழு அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவனத்தினர், பள்ளிகளின் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் தொடர்புடைய துறைகளின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**